Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 200/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வித்யபாரதி | Father Name | : | ஆனந்த் |
| Village | : | | Taluk | : | கும்பகோணம் |
| Caste | : | | Calling | : | அரசு மருத்துவர், கும்பகோணம் அரசு மருத்துவமனை |
| Religion | : | | Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக (சிவில் சர்ஜன்) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2024 ஆம் தேதி மதியம் 12.05 மணியளவில் நான் பணியில் இருக்கும் போது வலங்கைமான் தாலுக்கா, சித்தன்வாழூரைச் சேர்ந்த சித்ரா வயது 43, க/பெ. பழனிவேல் என்பவருக்கு சிகிச்சை அளித்தேன். அவரை நான் விசாரித்தபோது அன்று காலை 10.00 மணியளவில் அவருக்கு தெரிந்த நபர் அவரை செருப்பால் அடித்ததால் காயம்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு வெளிக்காயங்கள் ஏதும் இல்லை. இடது காது மடலில் தொடுவலி காணப்பட்டது.

அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை அளித்து சிகிச்சைக்கு பின்பு அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையானது சொற்ப காயம் என காய சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னிடம் சித்ரா தன்னை எந்த இடத்தில் செருப்பால் அடித்ததார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் தவறி கதவிலோ சுவற்றிலோ மோதினால் அவ்வாறான வலி ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.16 19:04:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.